# <u>இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் - 2010</u>

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 அபிப்பிராயம்**

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு, காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் நைவல மற்றும் குருநாகல் நிலையங்கள் அமைந்துள்ள காணியும் கட்டிடங்களினதும் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மிகுதி 08 நிலையங்கள் அமைந்துள்ள காணிகளும் கட்டிடங்களும் நிறுவனத்திற்கு சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்டு அவற்றின் பெறுமதிகளை அவ்வாறே கணக்குகளிற்கு கொண்டுவருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 பெறவேண்டிய/ செலுத்தவேண்டிய கணக்குகள்**

---

**(அ) தீர்த்துவைக்கப்படாத கடன்மீதி**

---

நிர்மாண சேவைக்காக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 7,872,590 பெறுமதியான 5 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான

கடன்கொடுத்தோர் மீதியினைத் தீர்த்துவைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 15,686,531 பெறுமதியான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் உறுதிப்படுத்துவதற்காக மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

---

2008 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 51 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு பங்குபற்றுவது தொடர்பாக 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,000 தொகை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

---

**2.1 நிதி மீளாய்வு**

---

**2.1.1 நிதிசார் விளைவு**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிறுவனத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்க மானியத்தினையும் வெளிநாட்டு மானியத்தினையும் கணக்கிலெடுத்துக்கொள்வதற்கு முன்னர் ரூபா 396,653,727 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான அதனோடொத்த பற்றாக்குறை ரூபா 282,572,159 ஆக இருந்தது. மீண்டுவரும் செலவுகளுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ரூபா 304,317,000 தொகையான அரசாங்க மானியத்தினையும் ரூபா 4,526,813 தொகையான வெளிநாட்டு உதவிப் பெறுவனவுகளையும் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் பற்றாக்குறை ரூபா 87,809,913 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான ரூபா 215,600,000 தொகையான அரசாங்க மானியம் மற்றும் ரூபா 1,148,353 தொகையான வெளிநாட்டு உதவிப் பெறுவனவுகளை கணக்கிற்கு எடுத்துக்கொணடதன் பின்னர் பற்றாக்குறை ரூபா 65,823,806 ஆக இருந்தது.

| கற்கைநெறி | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| கணக்கீட்டு உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி | 1955 | 1420 | 1389 | 1402 | 1502 |
| முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி | 382 | 232 | 333 | 451 | 419 |
| ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி | 236 | 200 | 206 | 221 | 245 |
| தொழில்நுட்ப (விவசாய) உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி | 163 | 69 | 92 | 142 | 139 |
| ஆங்கில தேசிய டிப்ளோமா கற்கைநெறி | 584 | 570 | 757 | 989 | 989 |
| வணிகக் கல்வி உயர் தேசிய டிப்ளோமா கற்ககைநெறி | 150 | 97 | 155 | 142 | 180 |
| வணிக நிதியியல் உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி | 36 | 32 | 30 | 48 | 64 |
| தகவல் தெழில்நுட்ப உயர்தேசிய டிப்ளோமா கற்கைநெறி | 103 | 271 | 304 | 367 | 385 |
| மொத்தம் | 3609 | 2891 | 3266 | 3762 | 3923 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாற்றங்களின் சதவீதம் | - | (22%) | 13% | 15% | 4% |

- 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாணவர்களைப் பதிவுசெய்தல் செயல்முன்னேற்றம் 2010 ஆண்டின் போது 4% ஆக இருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் இரண்டாவது செமஸ்டர் பரீட்சைக்காக முதல் தடவையாகத் தோற்றிய அனைத்து மாணவர்களின் ஒட்டுமொத்த பெறுபேறுகள் தொடர்பான பொழிப்பு ஒன்று கீழே தரப்படுகின்றது.

| உயர் தேசிய கற்கைநெறி | விண்ணப்ப தாரர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்காகத் தோற்றியவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந் தவர்களின் எண்ணிக்கை | சித்தியடை யாதவர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றாவர்களின் எண்ணிக்கை | படிப்பினைக் கைவிடல் | பரீட்சைக்குத் தோற்றி மாணவர்களில் சித்தியடைந்த மாணவர்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| கணக்கீடு | 3375 | 3227 | 1581 | 1646 | 148 | 16 | 49% |
| முகாமைத்துவம் | 747 | 712 | 313 | 399 | 35 | 06 | 44% |
| ஆங்கிலம் | 999 | 969 | 761 | 208 | 30 | 01 | 79% |
| தொழில்நுட்பம் (விவசாயம்) | 174 | 162 | 64 | 98 | 12 | 01 | 40% |
| வணிகக் கல்வி | 234 | 219 | 72 | 147 | 15 | 03 | 33% |
| வணிக நிதியியல் | 79 | 78 | 43 | 35 | 01 | 03 | 55% |
| தகவல் தொழில்நுட்பம் | 498 | 460 | 186 | 274 | 38 | 02 | 40% |
| மொத்தம் | 6106 | 5827 | 3020 | 2807 | 279 | 32 | 52% |

* நடாத்தப்பட்ட 07 கற்கை நெறிகளில் 04 கற்கை நெறிகளில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 50% இற்குக் குறைந்த எண்ணிக்கையாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

-------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பாதுகாப்புச் சேவையினை வழங்குதல்**

---------------------------------------------------------------

பாதுகாப்புச் சேவையினை வழங்கும் கேள்வி நிபந்தனை இலக்கம் 24 இன் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் அல்லது காவலாளர் தொடர்ச்சியாக 24 மணித்தியாலங்களுக்கு மேல் சேவையில் ஈடுபடுத்தக்கூடாது என்ற போதிலும் குருநாகல், தொழில்நுட்ப நிறுவனத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் 36 மணித்தியாலங்கள் படி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக அது தொடர்பாக பேணப்பட்ட பதிவேட்டில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் உடன்படிக்கையின் பிரகாரம் 10% மிகை அறவீடு ஒன்றினை அறவீடு செய்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) விதிவிலக்கான விடயங்கள்**

--------------------------------------------

மீளாய்வாண்டில் களுவெல்ல உயர் தொழில்நுட்ப நிறுவகம் நீக்கப்பட்டதன் காரணமாக அதன் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை ரூபா 15,942,448 தொகை (பெறுமானத்தேய்வு குறைந்ததன் பின்னர் பெறுமதி) வருமானச் செலவுக் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) காணிகளைச் சுவீகரித்தல்
(ஈ) நூல்நிலைய நிர்வாகம்